29th March 1958]

Electricity Board

* 466 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have provided any building for the Electricity Board?

The Hon. Sri V. RAMIAH : The head office of the Electricity Board has been permitted temporarily to occupy portions in the Secretariat Buildings. As the State Electricity Board is an autonomous body, it will have to make suitable arrangements for permanently housing its office, in due course.

Sri N. K. PALANISAMI : போர்டு ஏற்பட்டு கிட்டதட்ட ஒரு வருஷம் ஆகியும் இன்னும் ஏன் அதற்குக் கட்டிடம் ஏற்படுத்தவில்லை ? இப்போது எவ்வளவு ரூபாயில் ஏற்படுத்தப்போவதாக உத்தேசம்.

The Hon. Sri V. RAMIAH : போர்டு நடைபெற்று வருகிறது.

Sri A. A. RASHEED : Does the Board pay any rent for the buildings?

The Hon. Sri V. RAMIAH : No, Sir.

Forests

* 467 *Q.*—Sri A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of forests deforested by the Government in Vriddhachalam taluk so far;

(*b*) whether they have been deforested directly by the Government or through contractors; and

(*c*) the revenue realised by the sale of trees?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The following forests have so far been deforested in Vriddhachalam taluk in connection with the rehabilitation of displaced persons in the Neyveli Lignite Project :—

(1) Parur.

(2) Karmangudi.

(3) Kuppanatham.

(*b*) They have been deforested by the Forest Department through contractors.

(*c*) The amount realised by the sale of trees was Rs. 24,727.

Sri A. GOVINDASAMY : இந்தக் காடுகளை கண்டிராக்டர்கள் மூலம் அழிக்க நேரிட்டதால் அரசாங்கத்திற்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி அரசாங்கம் கருதவில்லை. சீக்கிரத்தில் மரங்களை வெட்டி நிலத்தை ஒப்படைக்க வேண்டியிருந்தது. லிக்னைட் கார்ப்பரேஷனின் வேலை துரிதமாக நடைபெற வேண்டும் என்பதுதான் முக்கியம்.

Sri A. V. P. ASAITHAMBI : ஒரு பக்கம் மரம் நாட்டும் விழா கொண்டாடப்பட்டு வருகிறபோது, இன்னொருபக்கம் காடுகளை அழிப்பது என் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : லிக்னைட் சுரங்க தொழிற்சாலையின் அவசியத்தை கனம் அங்கத்தினர் உணர்வார்கள் என்று நம்புகிறேன். அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு இடவசதியும், விவசாயத்திற்குத் தக்க வசதியும் செய்து கொடுக்கவேண்டியிருந்தது. இவை காடுகள் என்றாலும் பெரிய மரங்களோ, செடிகளோ உடையது அல்ல, லிக்னைட் சுரங்கத்தைச் சுற்றி இருபது, முப்பது மைல் தூரத்தில் அப்பேர்ப்பட்ட இடங்கள் இல்லையாதலால் இந்தக் காடுகளை அழிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

SRI M. KANDASAMI PADAYACHI : உளுந்தூர்பேட்டை, இடைக்கல், பாண்டுவ முதலிய இடங்களில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டாலும் அங்கே உடனடியாக வீடுகளைக் கட்டுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்போது விறகு கூட பொறுக்க முடியாமல் மக்கள் கஷ்டப்படுவதை அரசாங்கம் அறியுமா ? அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காடுகள் பூராவும் வீடுகள் கட்டவேண்டிய அவசியமில்லை. ஆனால் எங்கெங்கே திரும்ப மரங்கள், செடிகள் வைத்து வளர்க்க முடியுமோ அதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : நெய்வேலி சேப்ளாநத்தம் கிராமத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரா புறம்போக்கு நிலங்கள் இருக்கும்போது இந்தக் காடுகளை அழிக்கவேண்டிய அவசியம் என்ன ? அழிக்கப்பட்ட காடுகளில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வீடுகள் கட்டுவதற்கு மட்டும் அல்ல நிலம். நெய்வேலி நல்ல மண் அல்ல என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியாது. பக்கத்தில் விவசாயம் செய்வதற்கும் வசதிவேண்டும் என்று காடுகள் அழிக்கப்பட்டது.

Silk-worms

* 468 *Q.*—**SRI P. G. MANICKAM :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the extent of lands under mulberry cultivation for rearing silk-worms in the Talavadi firka, Coimbatore district; and

(*b*) the quantity and value of silk-yarn produced in 1957?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 1,317 acres at the end of December 1957.

(*b*) Nil, as there are no silk reeling establishments in Talavadi firka.

SRI P. G. MANICKAM : இந்த முசுக்கட்டைப் புழுக்களை வளர்ப்பதற்கான நிலங்கள் தாலவடியில் அதிகமாக இருப்பதால் பட்டுப் பூச்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக அங்குள்ள விவசாயிகளுக்கு தாராளமாக உதவியும் கடன் வசதியும் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்காக ஏதாவது உதவி வேண்டுமென்று அவர்கள் சர்க்காருக்கு மனு செய்தால் அதை பரிசீலனை செய்கிறோம்.

SRI P. G. MANICKAM : கொள்ளேகாலம் பிரிந்ததற்குப் பிறகு தாலவடியில் இந்தப் பட்டுக்களை விற்பதற்குறிய மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் இல்லாமல் இருக்கிறது. மேலும் அங்குள்ளவர்கள் மலைவாசிகள் ஆதலால் பட்டை விற்க வசதியின்றி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கு ஒரு மார்க்கெட்டிங் ஸொஸைடி ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?